Registered as a Newspaper In Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

மலர் 1 22-1-1985 செவ்வாய்க்கிழமை [illegible] 9) முழக்கம் 181

## இலங்கை ரோந்துப் படகிலிருந்து தமிழக மீனவருக்குச் சூடு!

(மதுரை)

நேற்று அதிகாலை ராமேஸ்வரத்திலிருந்து பத்துக் கிலோ மீட்டர் தொலைவில் பாரத கடல் எல்லைக்குள் ''அடைக்கல மாதா'' என்ற மீன்பிடிப் படகுமீது இலங்கையின் ரோந்துப் படகிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதால் ஒருவர் காயமடைந்து இராமநாதபுரம் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார், தமிழக மீனவர் முன்னர் தாக்கப்பட்டு மீனும், வலைகளும் பறிக்கப்பட்ட அதே இடத்தில்தான் இச்சம்பவமும் நடைபெற்றுள்ளது என்றும் இப்படகில் ஆறு மீனவர்கள் சென்றனர் எனவும் மூன்று வாரங்களுக்குப்பின் நேற்றுத்தான் அவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர் என்றும் அறிவிக்க (4ம் பக்கம் பார்க்க)

★ ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் நேற்றைய பேச்சு:

# வட, கிழக்கு பகுதி தமிழருக்கு மட்டும் உரியதா? அப்படியில்லை; ஏற்கமுடியாத சித்தாந்தம் இது!

(கொழும்பு)

''வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழருக்கோ அல்லது மற்றொரு சமூகத்தவருக்கோ மட்டுமே சொந்தம் என்ற சித்தாந்தத்தை ஏற்றுக்கொள்ள முடியாது'' என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்றுத் தெரிவித்தார்.

''பாரம்பரியமாக சிலபகுதிகள் சில சமூகத்தவருக்கே சொந்தம் என்ற சில அரசியல் கட்சிகளின் நிலை ஏற்கப்பட முடியாதது. வடபகுதியில் இரண்டு வருடங்களுக்குள் புதிய குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்படவுள்ளன. இதற்கென நூறு குடும்பங்களைத் தெரிவுசெய்யுமாறு ஒவ்வொரு எம். பிக்களிடமும் கேட்டுள்ளேன். வடபகுதியிலிருந்தும் இதற்கென குடும்பங்கள் தெரிவு செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

குளங்கள், பயிர்ச் செய்கை என்பன இப்புதிய குடியேற்றத் திட்டங்களின் அம்சங்களாகின்றன இந்நாட்டில் வாழும் மக்களில் எழுபத்தைந்து சதவீதமானோர் சிங்களவர்கள். எஞ்சியோர் ஏனைய சமூகத்தவர். குடியேற்றத் திட்டங்கள் இலங்கையின் பிரதான,

—4-ம் பக்கம் பார்க்க

# பருத்தித்துறை 5; கிளிநொச்சி 6 வீதியில் சென்றோர் சுட்டு கொலை!

## சீருடையினர் பகல் நாடகம் மேலும்பலர் ஆஸ்பத்திரியில்

(அலுவலக நிருபர்கள்)

ஆயுதம் தாங்கிய சீருடையினர் நேற்று மாலை பருத்தித்துறையிலும், கிளிநொச்சிப் பகுதியிலும் திடீரென வீதியால் சென்றோர் மீது நடத்தியதாகக் கூறப்படும் துப்பாக்கிப் பிரயோகத்தினால் மொத்தம் பதினொரு பேர் கொல்லப்பட்டதாக தெரியவந்துள்ளது. பருத்தித்துறைச் சம்பவத்தில் ஐவரும், கிளிநொச்சிச் சம்பவத்தில் ஆறு பேரும்மரணமானார்கள்.

பருத்தித்துறை சூட்டுச் சம்பவத்தினால் நால்வர் ஸ்தலத்திலேயே சுருண்டு விழுந்து மரணத்தைத் தழுவிக்கொண்டனர். மற்றொருவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிககப்பட்டு சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்பட்டபோது மரணமானார்.

கிளிநொச்சி பஸ் டிபபோவுக்கும் கரடிபபோக்குச் சந்திக்குமிடையில் மொத்தம் ஆறு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனராம். இதனைத் தவிர அபாயகரமான நிலையில் மேலும் பலர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கபபட்டனர்.

பருத்தித்துறையில் மரணமானவர்கள் ஓடக்கரைவீதி, இரண்டாம் குறுக்குத்தெரு, பத்திரகாளி அம்மன் வீதி ஆகிய இடங்களில் சுடப்பட்டவர்களாவர் இவர்களின் சடலம் மந்திகை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. இவர்களில் ஒருவர் செ. அருளானந்தம் என அடையாளம் காணப்பட்டுள்ளது. பாலசிங்

—4-ம் பக்கம் பார்க்க

## 4 கண்ணி வெடி கண்டு பிடிப்பு

(மட்டுநகர்)

மட்டக்களப்பு கல்முனை வீதியில் தாளங்குடா என்ற இடத்திலிருந்து நான்கு கண்ணிவெடிகளைப் பாதுகாப்புப் படையினர் நேற்றுக் கண்டுபிடித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்தேவி சம்பவம்: மரணமானோர் தொகை 50யும் தாண்டி விட்டது!

(முறிகண்டி)

சனிக்கிழமை இரவு முறிகண்டிக்கு அண்மையில் நடைபெற்ற யாழ்தேவி கண்ணி வெடிப்புச் சம்பவத்தில் மரணமானவர்கள் தொகை இன்று அதிகாலையளவில் ஐம்பதைத் தாண்டியுள்ளதாக தெரியவந்துள்ளது. நேற்றிரவு 38 பேர் மரணமானதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. இதில் 27 பேர் ராணுவ வீரர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மரணமான பிரயாணிகள் ஐவரில் மூன்று பேரின் சடலம் மட்டுமே நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்டது. இவர்கள் புகையிரதப் பகுதி ஊழியர்கள். மற்றைய இரு சடலங்களும் அடையாளம் காணப்படாமல் வவுனியா ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளன.

விபத்து நடைபெற்ற இடத்திலிருந்து சகல சடலங்களும் நேற்றிரவு நடைபெற்ற கடைசித் தேடுதலுடன் மீட்டுமுடிக்கப்பட்டதாகத் தெரியவந்துள் -4-ம் பக்கம் பார்க்க

## தாக்குதல் நடத்தியது யார்? ரெலோவா? புலிகளா?

யாழ்தேவிக்கு வெடிகுண்டு வைத்ததற்கு எந்தவொரு இயக்கமும் இதுவரை உரிமை கோராத போதிலும், ரெலோ அல்லது புலிகள் இயக்கம் இதனைச் செய்திருக்கலாம் என்றே பொதுவாக நம்பப்படுகின்றது என்று பி.பி.ஸி. தனது செய்தி அறிக்கையில் நேற்றிரவு தெரிவித்தது.

கண்ணி வெடி விபத்திலிருந்து தப்பிய சப் இன்ஸபெக்டர் ஒருவர் தெரிவித்த தகவலில் ''ரெலோ; ரெலோ'' என்ற வெற்றிக் கோஷத்தைத் தான் கேட்டதாகத் தெரிவித்திருக்கின்றார் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆனால், அச்சுவேலியில் தமிழ் ஈழ விடுதலை புலிகள்

—4-ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் மீனவர்கள் நால்வர் பாரத கடல்எல்லையுள் கைது

(சென்னை)

இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த இலங்கை மீனவர்கள் நால்வரை பாரதக் கரையோரக் கடற்படையினர் கைது செய்தனர்.

இராமேஸ்வரத்திலிருந்து இந்தியக் கடல் எல்லைக்குள் பத்து கிலோ மீட்டர் தூரத்தில் இவர்கள் கைதானதாகவும், நேற்று இராமநாதபுரம் மாஜிஸ்டிரேட் முன்னால் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் இவர்கள் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது

இந்திய பாஸ்போர்ட் சட்டத்தின் குற்றவிதிகளின் கீழ் இவர்கள் மீது வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளது. இவர்களது படகு பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

எஸ். தியாகர ஜ். எம். அல்பேட், ஜீ. பூராஜன். வை. தாசன் ஆகிய நான்கு மீனவர்களே இந்தியக் கடலில் கைது செய்யப்பட்டவர்களாவர்.

## அண்ணா தி.மு.க. தம்பித்துரை லோகசபை துணை சபாநாயகர்

(புதுடில்லி)

இந்திய லோகசபையின் துணைச்சபாநாயகராக அண்ணா தி. மு. க. உறுப்பினரான திரு.

—4-ம் பக்கம் பார்க்க

## யாழ் - கிளிநொச்சி பஸ் மீது நேற்று துப்பாக்கிச் சூடு!

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி நேற்றுமாலை பொழுது சாயும் வேளையில் சென்றபஸ்ஸொன்றின்மீதுசீருடையில் நின்ற சிலர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டினால் சிலர் காயமடைந்துள்ளனர்.

இந்த பஸ்ஸின் முன் பக்கக் கண்ணாடி துப்பாக்கி ரவைகள் துளைத்ததால் சுக்குநூறுகியது. பஸ்ஸில் பக்கத்துத் தக

—4 ம் பக்கம் பார்க்க

## தாக்குதல்

வவுனியாவிலிருந்து புறப்பட்டுச் சென்ற பல பஸ்களில் பிரயாணம் செய்த குறிப்பிட்ட சில இன மக்கள் ஈரப் பெரியகுளம் என்ற இடத்தில்

—4-ம் பக்கம் பார்க்க

### ஜனாதிபதி அறிவிப்பு

## பிரிவினை ஆதரிக்கும்வரை கூட்டணியுடன் பேச்சில்லை

(ஆனமடுவ)

''எமது நட்பு நாடு ஒன்றுடன் எமது இனப்பிரச்சினை குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் எமது நாட்டுக்குக் குற்றம் இழைத்தவர்களாகிறார்கள்'' என்று ஜனாதிபதி திரு ஜே.

—4-ம் பக்கம் பார்க்க

## ஆசிரியர்களுக்கு 190 ரூபா வரையில் சம்பள உயர்வு

ஆசிரியர் சமபளத்தை 190 ரூபாவரை அதிகரிப்பதென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கா நேற்று அறிவித்தார்.

தனியார் பாடசாலை ஆசிரியர்கள், ஆசிரிய பயிற்சிக் கல சாலை ஆசிரியர்கள் அனைவருக்கும் இந்தச் சம்பள உயர்வு கிடைக்குமென்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு அவர்களது சம்பளத்தின் பத்துச்சத வீதம் முதல் 18 சத வீதம் வரை விசேஷ அலவன்ஸ் வழங்குவதெனவும் கல்வி அமைச்சர் தீர்மானித்துள்ளார். தயாரத்ன கமிஷன் செய்த சிபார்சின் கீழ் இது அமுலுக்கு வருகிறது.

# ஆசிரியர்கள் இடமாற்றம் பெப்ரவரி முதல் வாரத்தில்

(அச்சுவேலி)

வடபகுதி ஆசிரியாசளின் வருடாந்த இடமாற்றம் பெப்ரவரி முதல் வாரத்தில் நடைபெறவுள்ளது 6 வருடங்ள் வெளிழ வட்டங்களில் சேவை ஆற்றியவர்களுக்கு சொந்த மாவட்டத்திற்கு இடமாற்றம் கிடைக்கவிருப்பதாக அறியப்படுகின்றது.

கடந்த சில வருடங்களாக வெளிமாவட்டங்கள் இடையே வருடாந்த இடமாற்றம் நடைபெறவில்லை பல வருடங்கள் தொடர்ச்சியாக வெளிமாவட்டங்களில் கடமைபுரியும் பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் இந்தவருடம் "வருடாந்த இடமாற்றம்" நடைபெறும் என்ற நம்பிக்கையில் எதிர் பார்த்து காத்திருக்கின்றனர்.

ஆசிரியர்களின் வருடாந்த இடமாற்றம், 1983 ஜூலையில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் மூன்ரும் கட்ட இடமாற்றம் ஆகியன தொடர்பாக கல்வி அமைச்சு கல்விச் சேவைக்குழு உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க தூதுக்குழு இந்தவாரம் மீண்டும் கொழும்புக்குச் சென்றுள்ளது.

## நீதிபதிகள் இடமாற்றம்

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. ரீ சுந்தரலிங்கம் அனுராதபுரத்துக்கும், அனுராதபுரம் மேல் நீதிமன்ற நீதிபதி திரு எஸ் ஆனந்தக் குமாரசாமி கொழும்புக்கும் நேற்று முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## இன்று ஆரம்பம்

(புத்தூர்)

யாழ். மாவட்டத்திற்கான தொழில் திணைக்களம் புத்தூர் உப தபால் அலுவலகத்திற்கு முன்பாகவுள்ள மண்டபத்தில் தச்சுத் தொழிற் பயிற்சியை இன்று ஆரம்பிக்கவுள்ளது.




✱ மல்லாகம் நீதிமன்ற வீதி, மகேந்திரன் சிவநேசம் தம்பதிகளின் மகள் சாந்தநாயகி இன்று தனது பதினோராவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✱ யாழ்நகர், மக்காம் வீதி, மஜீத் பெய்சுலா தம்பதிகளின் மகன் மின்ஹா இன்று தனது நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✱ ஏழாலை மேற்கு, பொன்னம்பலம் பரமேஸ்வரி தம்பதிகளின் மகள் துஷ்யந்தினி இன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✱ புன்னாலைக்கட்டுவன் தெற்கு, ராஜரெட்ணம் மங்கையற்கரசி தம்பதிகளின் மகன் ராஜகிரி இன்று தனது ஒன்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்

✱ பண்ணாகம், திருச்செல்வம் செல்வநாயகி தம்பதிகளின் மகன் சம்பந்தமூர்த்தி இன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✱ யாழ்.முஸ்லிம், கல்லூரி வீதி, முகமது இப்ராஹிம்—பதுறுனிஸா தம்பதிகளின் மகன் முகமது தனது பதின்நான்காவது பிறந்தநாளை இன்று கொண்டாடுகிறார்.

## அறிமுக விழா அரங்கேற்றம்

கோகிலா மகேந்திரன், புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் ஆகியோரின் "அறிமுக விழா" சிறுகதைத் தொகுதியின் அரங்கேற்றமும் பரிசளிப்பும் இம் மாதம் 26ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி பாவலர் துரையப்பா பிள்ளை மண்டபத்தில் திரு வே. கந்தையா தலைமையில் நடைபெறவுள்ளது.

## பிரிவுபசாரம்

(சுண்டுக்குளி)

யாழ். செயலக ஓய்வூதியக் கிளையில் ஓய்வூதியப் பிரிவில் பிரதம லிகிதராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்ற திரு எஸ் சச்சிதானந்தத்திற்கும், எழுதுவினைஞராகக் கடமையாற்றி இடமாற்றம் செய்யப்பட்ட திரு எஸ் தம்பிப்பிள்ளைக்கும் ஓய்வூதியக் கிளை ஊழியர்களால் திரு சந்தசாமி தலைமையில் பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது. திரு. சச்சிதானந்தம் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் அலுவலகத்திற்கும், திரு தம்பிப்பிள்ளை நல்லூர் உதவி அரச அதிபர் அலுவலகத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்,

மன்னரில்

# புனித செபஸ்தியார் விழா துக்கமாக கொண்டாட்டம்

(மன்னர்)

மன்னர்-வங்காலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் அண்மையில் இடம் பெற்ற சம்பவத்தின்போது வங்காலை பங்குத் தந்தை அருட் திரு. மேரிபஸ்தியன் கொல்லப்பட்டதால் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறும் புனித செபஸ்தியார் திருநாள் மன்னர் பகுதியில் துக்கமாகக் கொண்டாடப்படும்.

இதற்கான ஏற்பாடுகளை மன்னர் பங்கு கத்தோலிக்க மக்கள் மேற்கொண்டுள்ளனர் புனித செபஸ்தியார் திருநாளன்று நடைபெறும் திருப்பலிப் பூசையில் கலந்து கொள்ளும் கத்தோலிக்க மக்கள் கறுப்பு, வெள்ளை உடைகளையணிந்து திருப்பலிப் பூசையில் கலந்து கொள்வார்கள்.

ஆலயத்தில் ஏற்றப்படும் திருநாள் கொடியுடன் வெள்ளைக் கொடி ஒன்றும் ஏற்றப்படும். மூன்று மணித்தியாலத்திற்கு ஒரு முறை ஆலயத்தில் துக்க மணி அடிக்கப்படும்.

அன்றைய தினம் மன்னர் பங்கு கத்தோலிக்க மக்கள் தமது மதிய உணவை ஏழைகளுக்குத் தானம் செய்வார்கள்.

# கொடிதினம்: பாதிப்புற்ற மக்கள் புனர்வாழ்வுக்கு

தீவிரவாதிகளின் தாக்குதலினால் தங்களின் இருப்பிடங்களை விட்டு வெளியேறியிருக்கும் மக்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் எண்ணத்துடன் அரசாங்கசேவை, தேசிய தொழிற் சங்க சம்மேளனம் கொடிவாரமொன்றை அனுஷ்டிக்கவிருக்கிறது

கொடி விற்பனை மூலம் சேகரிக்கப்படும் பணம் பயங்கரவாதிகளின் தக்குதலினால் உயிர் இழந்த பொலீஸ் பாதுகாவலரின் குடும்பங்களுக்கும் பயன்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது அரசாங்கசேவையின் தேசிய தொழிற் சங்க சம்மேளனத்தின் தலைவரும் பிரதி உள் நாட்டமைச்சருமான பேர்ஸி சமரவீர செய்தி நிருபர் மகாநாட்டில் பேசும்போது இவ்வாறு தெரிவித்தார்.

இம்மாதம் இருபத்தைந்தாம் திகதி முதல் ஆரம்பமாகும் வாரத்தின் போது கொடிகளை விற்பனை செய்வதன் மூலம் பத்து இலட்சம் ரூபாவிற்கும் கூடுதலான தொகையைப் பெறக் கூடும் எனவும் முதலாவது கொடியை ஜனாதிபதி பெற்றுக் கொள்வாரெனவும் அவர் குறிப்பிட்டார்.

# அச்சுவேலி ஆவரங்கால் பொது அமைப்புகள் இணைப்பு

(சுண்டுக்குளி)

கிராம முன்னேற்றம், அபிவிருத்தி ஆகியனவற்றை நோக்கமாகக் கொண்டு ஆவரங்கால்-அச்சுவேலிப் பகுதிப் பொது ஸ்தாபனங்கள் ஒன்ருக இணைந்துள்ளன.

ஆவரங்கால், அச்சுவேலி இந்து இளைஞர் மன்றம், கிராம அபிவிருத்திச் சங்கம், விவேகானந்தா சன சமூக நிலையம், இளைஞர் சேவை மன்ற இளைஞர் கழகம், விவேகானந்தா விளையாட்டுக் கழகம் ஆகியன இணைந்து மத்திய குழுவொன்றை அமைத்துள்ளன.

இம் மத்திய குழு அங்குரார்ப்பணக் கூட்டத்தில் இப்பகுதி மக்களின் சமய, சமூக பொருளாதாரசீர் ருத்தத்திற்காக எல்லோரும் ஒன்று பட்டு உழைக்க வேண்டுமென்று மத்திய குழுத் தலைவர் திரு. எஸ் தேவதாசன் கேட்டுக் கொண்டார்.

**பட்டப் படிப்புகள் கல்லூரி**

புதிய மாணவர்களை அனுமதித்தல்

1985 / 86

இலங்கை பல்கலைக் கழகங்களின் வெளிநிலை பாடநெறிகளான

✱ கலைமாணி ✱ விஞ்ஞானமாணி (புள்ளி விபரவியல்) ✱ சட்டமாணி ✱ வணிகமாணி

க. பொ. த. (உயர்தரம்) மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவு திகதி 31-1-1985

விரிவுரைகள் 2-2-1985ல் ஆரம்பமாகின்றன.

குறிப்பு:- விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அனுப்பும் முதல் 150 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்

148/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 

உதவிப் பதிவாளர் பட்டப் படிப்புகள் கல்லூரி,

தொலைபேசி இல. 23715

**G.C.E. O/L வகுப்புக்கள்**

பெண்களுக்கான க. பொ. த. சாதாரண வகுப்புக்கள்

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் ஆரம்பமாகியுள்ளன

அத்துடன்

சனி, ஞாயிறு, தினங்களில்

நடனம், வீணை, வயலின், கிற்ரூர்

வகுப்புக்களும் நடைபெறுகின்றன

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

நிர்வாகி

**வின் இன்லேடீஸ் அக்கடமி**

61/1, பருத்தித்துறை வீதி;

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

## பௌசர்கள் வருவதில்லை; பண்ணையாளர் பாதிப்பு

கிளிநொச்சி பால் சபையினால் அப்பகுதி பால் பண்ணையாளரிடம் இருந்து பால் கொள்வனவு செய்யப்பட்டு பௌசர்கள் மூலம் பொலன்னறுவ கட்டிப்பால் தொழிற்சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. தற்போதைய சூழ்நிலையால் பொலன்னறுவவில் இருந்து பௌசர்கள் வருவது நிறுத்தப்பட்டதால், இப்பண்ணையாளரிடமிருந்து பால் கொள்வனவு செய்யப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது இதனால் இப்பாற் பண்ணையாளர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## ( வரி விளம்பரம் )

### ஏல விற்பனை

எப்பொருளானாலும் வாங்கவும் விற்கவும் தினமும் வாருங்கள் ஏலவிற்பனை நிலையம் சந்தியடி, கோப்பாய்.

### தவறி விட்டது

சென்ற 15-1-85ல் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் எனது இ. போ. ச. அடையாள அட்டை, சாரதி லைசென்ஸ் புத்தகம் முதலியன அடங்கிய டயறிக் கவருடன் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு அறிவிக்கவும். சன்மானம் வழங்குவோம்.

மு இரத்தினசபாபதி
நாகர்க்காவில் வீதி,
எழுதுமட்டுவாள்.

### விற்பனைக்கு

கொடிகாமம் கச்சாய் வீதியில் 15 பரப்பு தென்னங் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு;
டி. இந்திரன்
82, கச்சாய் வீதி,
கொடிகாமம்.

### விற்பனைக்கு

மீடியம் பற்றறியில் இயங்கும் AHUJA AMi8 TRANSISTOR MEGAPHONE டிரான்ஸிஸ்ர் மெக்காபோன்- HALDA HONEE DU கால்டா 15 அங்குலம் தமிழ் ரைப்றைட்டர் – முதிரை யன்னல்களும் – நிலைகளும் – எல்லாம் புத்தம் புதியன.
ஏல விற்பனை நிலையம்
(சந்தியடி) கோப்பாய்.

மாதாந்தம் 36%, வட்டி விழாக்கால சலுகை!

15-12-84 முதல்

30-01-85 வரை

36% அதீத வட்டி வழங்கும் நிதி நிறுவனம்

**தமிழர் நிதியம்**

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ☎ 22437

உறுதியான பாதுகாப்பிற்கும், மேலதிக லாபத்திற்கும் எம்மிடம் வைப்பிலிடுங்கள்.

உதய சிந்தனை

நம்மை நாம் ஆளப்போவதற்கு முன் நாம் ஆண்மையுள்ளவர்களாக வேண்டும்.

- மகாத்மா காந்தி

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

22-1-'5 செவ்வாய்க்கிழமை (இரத்தாக்ஷி தை 9)

# நச்சுக் கிருமிகளை ஒழிக்க வேண்டும்

இந்தியாவில் உளவு வேலைபார்த்து அகப்பட்டுக் கொண்ட ஏழு அதிகாரிகள் கைதானது பற்றிய செய்தி அனைவரது கண்களையும் விழிப்படையச் செய்துள்ளது.

உளவு பார்ப்பது என்பது அரசியலில் புதிதான ஒன்றல்ல.

உத்தியோகபூர்வமாகவே அமெரிக்கா, சோவியத் ரஷ்யா போன்ற வல்லரசுகள் உளவுப் பிரிவுகளை நடத்தி வருகின்றன.

சி. ஐ. ஏயும், கே ஜி பி. யும் இதற்காகவே உருவாக்கப்பட்டவை. இவைகளின் தலைமை அதிகாரிகள் அந்த நாடுகளின் அரசியலில் மிகவும் செல்வாக்குமிக்கவர்கள். தத்தம் நாட்டின் அரசாங்க மாற்றங்களையே செய்யுமளவுக்கு இவர்கள் அதிகாரம் கொண்டவர்கள்.

எனவே சி. ஐ ஏ. யையும் கே. ஜி. பியையும் மிகவும் கவனமாகவே மற்றைய நாடுகள் கண்காணித்துவருகின்றன.

ஆனால் பாரதத்தில் நடந்திருப்பது வேறு விஷயமாகும். இதனை வல்லரசுகளின் உளவுப்படையுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது.

பாரத அரசில் உயர் பதவி வகிக்கும் ஏழு அதிகாரிகள் உளவு வேலைகளில் ஈடுபட்டதாக வெளிவந்திருக்கும் செய்திகள் மிகவும் பாரதூரமானதாகவே தெரிகின்றது.

இந்திய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்கள் இருவரும், உதவிச் செயலாளர்கள் இருவரும் மட்டும் இதில் அகப்படவில்லை.

பிரதமரின் பிரதான செயலாளரின் அந்தரங்க உதவியாளரும் இதில் அகப்பட்டுள்ள ஒருவராவார்.

பிரதமரின் பிரதான செயலாளர் பி. சி. அலெக்ஸாண்டர் திறமையான, நேர்மையான அதிகாரி என்று பெயரெடுத்தவர்.

அன்னை இந்திரா காந்தி பிரதமராக இருந்த காலத்திலிருந்தே இந்தப் பதவியைச் சிறப்பாக வகித்து வந்தவர். தமது உதவியாளர் உளவு வேலையில் ஈடுபட்டுக் கைதானதை அடுத்து, "கௌரவப் பிரச்சினை" காரணமாக தமது பதவியை அலெக்ஸாண்டர் ராஜினமா செய்துள்ளார்.

உள்ளிருந்தே உளவு வேலை பார்த்த அதிகாரிகள் கைதானதால் பல ரகசியங்கள் அம்பலத்துக்கு வரலாமென்று எதிர்பார்க்க முடிகின்றது.

அண்ணல் மகாத்மா காந்தி முதல் அன்னை இந்திரா காந்தி வரை, பாரத மண்ணில் இடம் பெற்ற அரசியல் கொலைகள் பலவற்றின் ரகசியங்களைத் துப்புத் துலக்க பாரத பாதுகாப்பு அதிகாரிகள் பின் நிற்கக் கூடாது.

அன்னை இந்திராவை அவரது நம்பிக்கைக்குரிய மெய்க்காப்பாளர் படைப் பிரிவைச் சேர்ந்த ஒருவன் கொலை செய்தபோதே நியாயமான சந்தேகம் மக்கள் மத்தியில் வலுப்பெற ஆரம்பித்தது.

"சி ஐ. ஏ யினரின் திட்டமிட்ட கொலையே இது" வென்று சோவியத் ரஷ்யா பகிரங்கமாகக் குற்றம் சாட்டியது.

இதனைப்பற்றி எந்தக் கருத்தும் தெரிவிக்க மறுத்த பாரத அரசியல் தலைவர்களும், அதிகாரிகளும் நான்கு மாதம் பொறுத்திருந்து நல்லதொரு பணியைச் செய்துள்ளனர்.

"நமது அண்டை நாடுகளால் எமக்கு ஆபத்து அதிகரிக்கின்றது" என்று அடிக்கடி அன்னை சொன்னதையே, தனயனும் சொல்லி வந்தார்.

அயலவர்களின் ஆதிக்கம் இந்திய அரசியலுள் நுழைந்து, உளவு சொல்லும் அதிகாரிகள் குழுவொன்றை உருவாக்கியுள்ளதென்பதே விசாரணை நடத்தி வரும் பாதுகாப்புத் துறையினரின் கருத்தாகும்.

அயல் நாடொன்றின் "ஐந்தாம் படை" பாரதத்துக்குள் நுழைந்துள்ளது என்று சில மாதங்களுக்கு முன்னர் தமிழக முதலமைச்சர் எம். ஜி இராமச்சந்திரன் சொன்னதையும் நாம் இப்போது நினைவுபடுத்திப்பார்க்க வேண்டியுள்ளது.

வெளியிலுள்ள பகிரங்க எதிரியிலும் பார்க்க, உள்ளிருந்து நண்பன் போல நடிக்கும் எதிரியே பயங்கரமானவன்

இந்தச் சந்தர்ப்பத்திலாவது 'அவர்களைக்' கண்டு பிடித்த பாரத அதிகாரிகள் பாராட்டுக்குரியவர்கள். ஆனால் இதனுடன் அவர்கள் வேலை முடிந்து விடக்கூடாது.

பாரத ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டுமானால், "அடிவேர்" வரைக்கும் தேடிச் சென்று நச்சுக் கிருமிகளைக் கண்டு பிடித்து ஒழிக்க வேண்டும்.

# "ராணுவ அரசு நடுங்குகிறது"

# தடை மீறி இன்று கூட்டம்

## பாக். எதிரணி உறுதிமிகு அறிவிப்பு

(லாகூர்)

"மக்கள் எதிர்ப்பு கண்டு நடுங்கிப் போய்விட்டது இராணுவ அரசாங்கம். அதனால் அரசாங்கம் செயலற்றுப் போய்விட்டது. பொதுக் கூட்டங்கள் நடத்த அரசாங்கம் தடை விதித்துள்ள போதிலும் அதனை மீறி லாகூரில் செவ்வாய்க்கிழமை பொதுக்கூட்டம் நடத்தியே தீருவோம்" என்று பாகிஸ்தானின் பதினொரு எதிர்க்கட்சிகள் இணைந்த ஜனநாயக மீட்புக் கமிட்டி சார்பில் முஹம்மத் காசிம் நேற்று லாகூரில் வைத்து அறிவித்தார்.

ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல் ஹக் நடத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ள பொதுத் தேர்தலைப் பகிஷ்கரிப்பதென்ற முடிவினை எதிர்க்கட்சிகள் நேற்று ஊர்ஜிதம் செய்தன.

"அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும், இராணுவ நீதிமன்றங்கள் கலைக்கப்படவேண்டும் பத்திரிகைத் தணிக்கை நீக்கப்படவேண்டும் அப்போது சீரான ஓர் சூழ்நிலை நாட்டில் உருவாகும் அவவேளை பொதுத்தேர்தல் நடத்தப்படலாம். இவற்றிற்குக் குறைந்த எந்த நிலையினையும் ஜனநாயக மீட்புக் கமிட்டி ஏற்காது" என்றும் காசிம் சொன்னார். இதேவேளை பாகிஸ்தானின் மற்றொரு எதிர்க்கட்சித் தலைவர் அமெரிக்க சஞ்சிகை ஒன்றிற்கு அளித்த பேட்டி ஒன்றில் "பாகிஸ்தானில் மனித உரிமைகளே இல்லாது போய் விட்டது அடக்குமுறை தலைவிரித்தாடுகிறது" என்று கூறியிருக்கிறார்.

## றீகன் பதவி ஏற்றார்

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் ஜனாதிபதியாக திரு. றொனல்ட் றீகன் நேற்றுமுன்தினம் மீண்டும் பதவியேற்றுக் கொண்டார். அமெரிக்க தலைமை நீதிபதி பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். எழுபத்துமூன்று வயதான திரு. றீகனே அமெரிக்காவின் வயது முதிர்ந்த ஜனாதிபதியாவார்.

## இன்று தெரிவு

(புதுடில்லி)

லோகசபையின் புதிய துணைச் சபாநாயகர் தெரிவு இன்று நடைபெறவிருக்கிறது. அ.தி.மு.க சார்பில் தர்மபுரி லோகசபை உறுப்பினர் திரு தம்பித்துரையின் பெயர் இப்பதவிக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது. எதிர்க்கட்சிகள் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் எனத் தெரிகிறது.

### இலங்கை கடற்படையினர் பிரச்சினை

## "மத்திய அரசே முடிவுசெய்ய வேண்டும்-" நெடுஞ்செழியன்

(சென்னை)

"பாரத கடலாதிக்கப் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்ததாகவும் தமிழக மீனவர் மீது பலாத்காரப் பிரயோகித்ததாகவும் கைதாகியுள்ள இலங்கை கடற்படையினர் மீதான மேல் நடவடிக்கை குறித்து மத்திய அரசுதான் தீர்மானிக்க வேண்டும் நடவடிக்கைகுறித்துத் தமிழ அரசினால் இயலாது என்று நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் நேற்று சென்னையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர் பதினேழு பேரையும் விடுதலை செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

கைதான இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## ரூ. 10 ஆயிரம் நஷ்டஈடு

(சென்னை)

இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழக மீனவர் மூவரின் குடும்பங்களுக்கு தமிழக அரசுசார்பில் தலா பத்தாயிரம் ரூபாவை வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. காளிமுத்து நேற்று வழங்கினார்.

## தமிழக மந்திரிசபை நாளை கூடுகிறது

(சென்னை)

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட விவாதத்தின் பொருட்டு தமிழக அமைச்சரவை புதன் கிழமை கூடவிருக்கிறது. ஆறாவது ஐந்தாண்டுத்திட்டத்திற்குமூவாயிரத்து முந்நூற்றைம்பது கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததென்றும் இததடவை கணிசமாக இத்தொகை மத்திய அரசினால் அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் நேற்றுத் தெரிவித்தார்.

### வளைகுடாவில் ஈரானிய

## கப்பல்கள் மீது தொடர்ந்து ஈராக் விமானத் தாக்குதல்

(பாக்தாத்)

வளைகுடாப் பிராந்தியத்தில் தனது போர் விமானங்கள் ஈரானியக் கப்பல்கள் மீது பாரிய குண்டு வீச்சுத் தாக்குதல்களை தொடர்ந்து நேற்றும் நடத்தியதாக ஈராக் அறிவித்தது. நேரடியாக இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக பாக்தாத் அறிக்கைகள் தெரிவித்தன.

கடந்த வருட இறுதிவரை ஈராக் பதினான்கு தாக்குதல்களை வளைகுடாப் பிராந்தியத்தில் மேற்கொண்டதாகத் தெரிவித்துள்ளது.

இதே வேளை, வளைகுடாப் போரை சுமுகமாகத் தீர்த்து வைக்க ஏழு அரபு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளனர் என்று பிந்திக் கிடைத்த தகவல் ஒன்று கூறுகிறது.

## அணு ஆயுதநிலை: 28-ல் உச்சிமாநாடு

(புதுடில்லி)

பாரதம், சுவீடன், தான்ஸானியா, மெக்ஸிக்கோ உட்பட ஆறுநாடுகள் கலந்து கொள்ளும் அணு ஆயுதக்கட்டுப்பாடு, தவிர்ப்பு சம்பந்தமான உச்சி மாநாடு இம்மாதம் இருபத்தெட்டாம் திகதி புதுடில்லியில் நடைபெறவிருக்கிறது.

அணு ஆயுதக் குறைப்புத் தொடர்பாக வல்லரசுகளையும், அணு ஆயுத உற்பத்தி நாடுகளையும் கோரும் முக்கிய தீர்மானம் இம் மாநாட்டில் எடுக்கப்படும்.

இதேவேளை ஜெனீவாவில் இம்மாத முற்பகுதியில் நடைபெற்ற சோவியத் யூனியன்-அமெரிக்கப் பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமாக அமைந்தது குறித்து பாரத வெளிவிவகாரச் செயலாளர் திரு. ராஸ் கோத்ரா மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

### "எமக்கு ராணுவத்தில் அல்ல

## ஆன்மீக பலத்திலே தான் நம்பிக்கை" -வெங்கட்ராமன்

(புதுடில்லி)

"பாரதத்தின் அசாதாரண சாதனைகளைக் கண்டு பொறாமையடைந்துள்ள சில வெளிநாட்டுத் தீய சக்திகள் எம் நாட்டின் பிரதேச ஒற்றுமையைக் குலைக்கத் திட்டமிட்டுச் செயற்படுகின்றன. இச் சக்திகள் குறித்து மக்கள் விழிப்புடனிருந்து ஒடுக்க வேண்டும்" என்று ஜனாதிபதி திரு. ஜெயில் சிங் நேற்றுப் புதுடில்லியில் சுவாமி தயானந்த சரஸ்வதியின் நூற்றாண்டு விழாவில் பேசுகையில் மக்களை எச்சரித்தார்.

இதேவேளை துணை ஜனாதிபதி திரு. ஆர். வெங்கடராமன் புதுடில்லியில் நடைபெற்ற மானிட சக்தி மறுமலர்ச்சித் தொடர்பாக நடைபெற்ற மாநாடு ஒன்றில் பேசுகையில், "பாரதம் இராணுவ பலத்தை நம்பியல்ல, ஆன்மீக பலத்தை நம்பி மரபுநிலை பேணி பார் எங்கும் ஈடில்லா புகழ் பெற்றது" என்று கூறினார்.

சாந்தி - (யாழ்நகர்)
12-1-85 முதல்
10 30, 2.15 மட்டும்
கமல், சுலக்ஷணா. ராதா, தங்கவேலு நடித்த
A. V. . இன்
தூங்காதே தம்பி தூங்காதே
(ஈஸ்மன் கலர்)

# ஈழமுரசு

## லலித் தலைமையில் வீரப் போர்! மகிழ்கிறேன் என்கிறார் ஜனாதிபதி

(ஆனமடுவ)

''தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி தலைமையில் ஆயுதப்படையினரும் பொலிசாரும் நடத்தும் வீரப்போர் குறித்து உண்மையிலேயே நான் மகிழ்ச்சி அடைகிறேன்'' என்று ஜனாதிபதி திரு. ஜே ஆர் ஜெயவர்த்தன நேற்று ஆனமடுவ மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இலவச பாடநூல் வழங்கல் வைபவத்தில் பேசுகையில் ஓர் கட்டத்தில் குறிப்பிட்டார். தீவிரவாதிகளுக்கு எதிராக இந்தப் போராட்டம் நடத்தப்படுவதாகவும் அவர் சொன்னார்.

### யாழ். பெற்றோர் சங்கம் கோரிக்கை:

# கல்வியில் அரசியல் கூடாது! ஜி. சி. ஈ. பரீட்சை மீண்டும் நடத்தவேண்டும்

டிசெம்பர் மாதத்தில் நடைபெற்ற க பொ த சாதாரண தரப் பரீட்சையில் இடம் பெற்ற பல்வேறு குறைபாடுகளையும் சுட்டிக்காட்டி மாணவர்களின் நலன் கருதி வட மாகாணத்தில் மீண்டும் எல்லாப்பாடங்களுக்கும் இப்பரீட்சையை நடத்த வேண்டுமென்று யாழ் பெற்றோர் சங்கம் கல்வி அமைச்சைக் கோரியுள்ளது

இதுதொடர்பாக, பெற்றோர் சங்கத்தின் செயலாளர் திரு. எஸ். பொன்னையா கையொப்பமிட்டு, கல்வியமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில, மாணவர்களின் கல்வி நலன்கள் அரசியலோ, இன சார்போ அற்ற முறையில் நடுநிலை உணர்வுடன் கவனிக்கப்பட வேண்டியவை என்று சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

ஒரு சில நாட்களுக்கு முன் பரீட்சை பின்போடப்பட்டதாக வானொலி மூலம் தெரியப் படுத்தியதும், பின்னர்பரீட்சை நடைபெறுமென்று கூறியதும், மாணவர்களின் பரீட்சை ஆயத்தத்தைப் பாதித்த துடன் மனத்தளர்ச்சியையும் ஏற்படுத்தியது.

பரீட்சை ஆரம்பமான எட்டாம் திகதியன்று நண்பகலிலிருந்து ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படுமென்ற வானொலிச் செய்தி பரீட்சை நடைபெறுமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியது. சிலர் பிள்ளைகளைப் பரீட்சைக்கு அனுப்பவில்லை. பலர் பரீட்சை நடைபெறுவதாக அறிந்து பல மணித்தியாலம் காலந்தாழ்த்தியே பரீட்சைக்குச் சென்றார்கள். பரீட்சை ஆரம்பமான அன்றே ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளையில் பிற்பகலில் பரீட்சை நடைபெற்றுள்ளது.

பரீட்சை காலத்தில் கொக்குவில், திருநெல்வேலி போன்ற இடங்களில் பாதுகாப்புப் படைகள் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தியதால் பலர் பரீட்சைக்குச் செல்லவில்லை.

தொடர்ந்து மூன்று நாட்கள் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்ததால் விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்கள் நடைபெறவில்லை. மன்னாரில் எந்த ஒரு பாடத்திற்கும் பரீட்சை நடைபெறவில்லை என்றும் அக்கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## நேற்றைய மரண தண்டனை

பல தடவை எச்சரித்தும் திருதாதவரெனத் தெரிவிக்கப்பட்ட இளைஞர் ஒருவருக்கு நேற்று வெலிங்டன் சந்திக்கு அருகில் மரணதண்டனை வழங்கப்பட்டது. காரைநகரைச் சேர்ந்த மகாலிங்கம் என்பவரே 'செம்படை' இயக்கத்தினரால் இத்தண்டனையைப் பெற்றவராவார். பல மணி நேரமாக சந்தியில் கிடந்த சடலம் மாலை 5-30 மணியளவில் வாகனமொன்றில் எடுத்துச் செல்லப்பட்டது.

## வட, கிழக்கு...

—1-ம் பக்கத் தொடர்

சகல காணிகளிலும் உருவாக்கப்படும். இதில் இன, மத வேறுபாட்டிற்கிடமில்லை. இந்த வகையில் வடபகுதியில் ஓர் புதிய குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்க படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பயங்கரவாதிகளுக்கு இனப் பிரச்சினையைத் தீர்க்கும் எண்ணமில்லை. இரத்தக்களரி மூலம் ஜனநாயக ரீதியிலான அரசைக் கவிழ்த்துத் தம் நோக்கத்தை எட்டுவதே அவர்களின் நோக்கம் 1971ம் ஆண்டு கிளர்ச்சி போன்று பயங்கரவாதத்தை உடன் தீர்த்துவிடமுடியாது'' எனவும் ஜனாதிபதி கூறினார்.

## நல்லூரில் கொள்ளை

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து பெருமளவு பணம் நேற்றுப் பகல் இனந்தெரியாதவர்களால் கொள்ளையடித்துச் செல்லப்பட்டது. கொள்ளைபோன பணத்தின் தொகை எவ்வளவு என்பது பற்றி இதுவரை அறிவிக்கப்படவில்லை.

## பருத்தி துறை...

—1-ம் பக்கத் தொடர்

கம் என்ற அடகு கடை முதலாளி காயத்துடன் மந்திகையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

படுகாயத்துக்குள்ளாகி யாழ் ஆஸ்பத்திரி கொண்டு வரப்பட்ட நா. பஞ்சலிங்கம் (30) பின்னர் மரணமானார். எஸ். தில்லையம்பலம்(28), எஸ்.குணரத்தினம் (21) ஆகிய இருவரும் கவலைக்கிடமான நிலையிலுள்ளனர்.

கிளிநொச்சிச் சம்பவத்தில் மரணமானவர்களில் ஒருவர் காந்தன் என்ற வர்த்தகர் என்று கிளிநொச்சி ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. மற்றைய சடலங்களைப் பற்றிய சரியான விபரங்கள் தெரிவிக்கப்படவில்லை.

### யாழ் பல்கலைக் கழக

## புதிய கல்வியாண்டு வகுப்பு பிரார்த்தனையுடன் ஆரம்பம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின புதியகல்வியாண்டு விரிவுரைகள் நேற்று இங்கு தனித்தனியாக நடைபெற்ற சர்வமதபிரார்த்தனையுடன ஆரம்பமானது.

கைதடியில் பல்கலைக் கழகத்தினால் உருவாக்கப்பட்ட சித்த மருத்துவ வகுப்பும் நேற்று ஆரம்பமானது. முதலாம் வருடத்துக்குத் தெரிவான இருபத்தைந்து மாணவர்களும் நேற்று வந்திருந்தனர்.

மருதனாமடம் நுண்கலைப் பிரிவின் வகுப்புகளும் நேற்றுத் தொடக்கிவைக்கப்பட்டதாக பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. வி. என். சிவராசா தெரிவித்தார்.

பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் அப்போதிக்கரி வகுப்புகளும் ஆரம்பமாகியுள்ளதாகவும், சகல மாணவரும் விரிவுரைகளுக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## எம்.ஜி.ஆர். நிலை

(நியுயோர்க்)

திரு. எம். ஜி இராமச்சந்திரன் தன்னைச் சந்திக்க வந்த பாரதத்தின் நியுயோர்க் தூதுவர் திரு வஜ்பாய், பாரத அட்டோர்ணி ஜெனரல் பராசுரன் ஆகியோரைக் கை கூப்பி வணக்கம் என்று தெளிவாகக் கூறி வரவேற்றார் என்று நேற்று அவரது குடும்ப டாக்டர் சுப்பிரமணியம் தெரிவித்தார்.

சென்னை அப்பலோ மருத்துவமனை டாக்டர் பி.சி ரெட்டியும் முதல்வர் நிலைகுறித்து திருப்தியும் மகிழ்ச்சியும் தெரிவித்ததாகவும் கூறப்பட்டது.

## யாழ்தேவி...

—1-ம் பக்கத் தொடர்

ளது. இச்சம்பவத்தில் மூன்று பொலிஸாரும் கொல்லப்பட்டதாக நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

பலத்த சேதத்துக்குள்ளான மூன்று பெட்டிகளும், தடம் புரண்ட ஐந்து பெட்டிகளும் நேற்று படை வீரர்களால் பூரணமாகச் சோதனையிடப்பட்டன. இவ் விபத்தினால் புகையிரதப் பகுதிக்கு சுமார் முப்பது லட்சம்ரூபா சேதமேற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் கால்மைல் நீளமான ரயில்பாதை முற்றாகச் சேதமடைந்தது.

## தாக்குதல் நடத்தி...

—1-ம் பக்கத் தொடர்

இயக்கத்தின் முகாம் ஒன்றை பாதுகாப்புப்படைகள் அண்மையில் தாக்கி பெருமளவு ஆயுதங்களை கைப்பற்றியதால் தாம் இன்னமும் இயங்கிக் கொண்டுதான் இருக்கிறோம் என்பதைக் காட்டவதற்காக புலிகள் இயக்கமே மேற்கொண்டிருக்கலாம் என்று பி பி. சியின் விமர்சகரான மிக் மிலூ ஜன்ற் கருத்துத் தெரிவித்துள்ளார்.

## மோகனரங்கம் தலைவர்

(சென்னை)

அண்ணா தி மு.கவின் ராஜ்ய சபை குழுவின் தலைவராக திரு மோகனரங்கமும் துணைத்தலைவராக திரு. ஆலடி அருணாவும் கொறடாவாக வலம்புரி ஜானும் நேற்றுத் தெரிவாகியுள்ளனர். இதுவரை துணைத்தலைவர் பதவியை வகித்தவர் செல்வி ஜெயலலிதா என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரிவினை...

—1-ம் பக்கத் தொடர்

ஆர். ஜெயவர்த்தன நேற்று ஆனமடுவ மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இலவச பாடப்புத்தக வழங்கல் நிகழ்ச்சியில் பேசுகையில் கூறினார்.

''நாட்டைப் பிளவுபடுத்தும் எண்ணத்துடன் இயங்கும் எவருடனும் பேச்சுவார்த்தை நடத்த நான் விரும்பவில்லை தமிழர் விடுதலைக் கூட்டணியின பிரிவினையை ஆதரிக்கும் வரை அவர்களுடன் பேசுவதற்கு இடமில்லை என்றும் அவர் சொன்னார்.

இலங்கை ஒரு நாடு. சகலருக்கும் சொந்தமானது. இதில் எழுபத்தைந்து வீதம் சிங்களவர்கள். விகிதாசார அடிப்படையில் நாடெங்குப் குடியேற்றத் திட்டங்கள் இலங்கைப் பிரஜைகள் சகலருக்குமாக நடைபெறவுள்ளன'' என்றும் ஜனாதிபதி தனது பேச்சில் சொன்னார்.

## இலங்கை ரோந்து...

— 1ம் பக்கத் தொடர்

கப் பட்டுள்ளது, இத்துப்பாக்கிச் சூடு குறித்துத் தனக்கு தகவல் கிடைத்திருப்பதாக இராமநாதபுரம் ஆட்சித்தலைவர் திரு, குருமூர்த்தி நேற்றுத் தெரிவித்தார், உத்தரவு ஏதும் இதுவரை வராததால் இலங்கைக் கடற்படையினர் ஏழு பேரும் தொடர்ந்து காவலில் உள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது.

## ஜனாதிபதி பாகிஸ்தான் ரஷ்யா விஜயம்

ஜனாதிபதி ஜெயவர்த்தனா ஏப்ரல் மாதத்தில் பாகிஸ்தானுக்கும், மே மாதத்தில் ரஷ்யாவுக்கும் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளாரெனத் தெரியவந்துள்ளது.

## தடம் புரண்டது

நேற்று முன்தினம் கொழும்பில் இருந்து அனுராதபுரம் நோக்கி வந்த எண்ணெய் புகையிரதம் தமுத்தேகமவில் பாதையைவிட்டு தடம் புரண்டது அதனால் தலாவ — கல்கமுவவுக்குஇடையில் பஸ்மூலம் பிரயாணிகள் பயணம் செய்ய வேண்டியுள்ளது.

## அகதிகள் பற்றி ஆய்வு

(கைதடி)

கைதடி அகதிகள் முகாமில் தங்கியிருந்து தற்போது மறவன்புலவு, கெற்பேலி ஆகிய இடங்களில் இடம் பெற்று வரும் வீட்டுத்திட்டங்களில் தங்கியிருக்கும் அகதிகளின் எதிர்காலப் புனர்வாழ்வு கருதி அறவழிப் போராட்டக் குழுவினர் ஓர் சமூக பொருளாதார ஆய்வினை நடத்தவுள்ளனர்.

இவ் ஆய்வின் பின்னர், இவர்கள் விரும்பும் புனர்வாழ்வினை மிகத் துரித கதியில் செயல்படுத்த விருப்பதாக இக்குழுவின செயலாளர் திரு க ஜீவகதாஸ் தெரிவித்துள்ளார்.

## தாக்குதல்...

—1-ம் பக்கத் தொடர்

வைத்து ஆயுதபாணிகளான சிலரால் நையப்புடைக்கப் பட்டார்களாம். இதன் பிறகு வவுனியா பஸ்களின் ஊழியர்கள் குறிப்பிட்ட மக்களை தமது பஸ்ஸில் ஏற்றாமல், அவர்களுக்கு மறைமுகமாக பாதுகாப்பு வழங்கினராம்.

## அண்ணா தி மு.க...

—1-ம் பக்கத் தொடர்

எம் தம்பித்துரை போட்டியின்றித் தெரிவானார் நேற்றுடன வேட்புமனு காலக்கெடு முடிந்தபோது இவரது பெயர் மட்டுமே முன்மொழியப்பட்டிருந்தது. இன்றைய லோக சபைக் கூட்டத்தில் இவரது தெரிவு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்.

## யாழ் - கிளிநொச்சி...

—1-ம் பக்கத் தொடர்

ரத்தால் சன்னங்கள துளைத்துக் கொண்டு உள்ளே சென்றன.

பஸ்ஸின் உள்பக்கத்தில் ஆசனங்களுக்கருகே இரத்தத் துளிகள் காணப்பட்டன பஸ்ஸிலிருந்த பலரும் கீழே இறக்கப்பட்டு அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாம். பஸ்ஸுக்குள்ளிருந்த ஒருவர்முழங்காலுக்குக் கீழ் காயமடைந்தாராம்.

கிளிநொச்சி டிப்போவைச் சேர்ந்த 29 சிறி 285 இலக்கத்தைக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்ட குறிப்பிட்ட பஸ் பிரயாணிகள் எவருமின்றி நேற்றிரவு கிளிநொச்சி டிப்போவைச் சென்றடைந்தது.

## மரண அறிவித்தல்

### நல்லூர் சண்முகம வல்லிபுரம்

நல்லூர் சந்திரசேகரப்பிள்ளையார் கோவிலடி சண்முகம் வல்லிபுரம் (சுருட்டுத்தொழில் வர்த்தகர்) காலமானார் இவர் விசாலாட்சியின் கணவரும், திருச்செல்வம் (கடல் கடந்த தொலைத் தொடர்பு திணைக்களம்) சிவச்செல்வம் (ஆசிரியர்) செல்வச்சந்திரன், செல்வநிதி, செல்வரூபி, தயாநிதி, ஜெயாநிதி ஆகியோரின் தந்தையும், ஜெயராணியின் மாமனுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 22-1-85 செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு செம்மணி மயானத்தில் நடைபெறும்

'ஈழமுரசு' சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால், 37, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப்பகுதியில் 22-1-85 செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.